நெல்லியாளம் நகராட்சி அலுவலகம்,
பந்தலூர், நீலகிரி மாவட்டம்.

## சிறப்புக்கூட்டம் 22/01/2021 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு

**பொருள் எண்.1**

நெல்லியாளம் நகராட்சி 94.28 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், 21 வார்டுகளையும் உள்ளடக்கியது. இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்களிலிருந்து நாள்தோறும் 3.5 மெட்டிரிக் டன் அளவு குப்பைகள் சேகரிக்கப்பட்டு முறைப்படி உரம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

அரசாணை நிலை எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.04.1997 ல் வெளியிட்டுள்ள அளவு கோல் படி இந்நகராட்சி பொது சுகாதார பணிக்கு தேவையான தூய்மை பணியாளர்கள் விபரம் கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1) | நகராட்சியில் உள்ள மொத்த குடியிருப்பு எண்ணிக்கை | 11183 |
| 2) | 250 குடியிருப்புகளுக்கு 3 பேர் கொண்ட குழு வீதம் (11183/250x3) | 134 |
| 3) | நகராட்சியில் உள்ள வாகனங்களின் விபரம் | |
| | டிப்பர் லாரி | 1 |
| | LCV | 3 |
| | டம்பர் பிளேசர் | 1 |
| 4) | டிப்பர் லாரி வாகனம் ஒன்றுக்கு 4 பணியாளர்கள், LCV வாகனம் ஒன்றுக்கு 2 பணியாளர்கள், டம்பர் பிளேசர் வாகனம் ஒன்றுக்கு 1 பணியாளர் என கணக்கிட்டால் வாகனங்களுக்கு தேவைப்படும் மொத்தப் பணியாளர் எண்ணிக்கை (1x4+3x2+1x1) | 11 |
| 5) | பேரூந்து நிலையம் | 2 |
| 6) | நகராட்சி வணிகவளாக தூய்மை பணி | 2 |
| 7) | பொது கழிப்பிட தூய்மை பணி | 15 |
| 8) | உரக்கிடங்கு பகுதிகளில் தூய்மை பணி | 2 |
| 9) | Windrows pad 1 எண்ணிக்கை | 2 |
| | **மொத்தம் வரிசை எண் 2+4+5+6+7+8+9** | **168** |

மேற்கண்டுள்ள கணக்கீட்டின்படி நெல்லியாளம் நகராட்சியில் 168 தூய்மை பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். தற்பொது இந்நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்கள் 10, அதில் 8 பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர் மற்றும் 2 பணியிடங்கள் காலியாக உள்ளது. இந்நகராட்சியில் திடக்கழிவு மேலான்மை பணிகள் செவ்வனே செய்ய கூடுதலாக 160 தூய்மை பணியாளர்களை ஒப்பந்த புள்ளி கோரி ஒப்பந்தாரர் மூலமாக ஈடுப்படுத்த வேண்டி உள்ளது. தற்போதைய நகராட்சி நிதி நிலமையை கருத்தில் கொண்டு பொது சுகாதார பணிக்கு 50 தூய்மை பணியாளர்கள் ஒப்பந்த புள்ளி கோரி ஒப்பந்ததாரர் மூலமாக பணியில் ஈடுபடுத்தவும், கீழ்கண்ட கணக்கீட்டின்படி அதற்கான உத்தேச செலவினம் ரூ.136.62 இலட்சத்திற்கும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**தூய்மை பணியாளர்கள் செலவினங்கள் விபரம்.**

| | | | |
|---|---|---|---|
| 1) | நீலகிரி மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி பட்டியல்படி தூய்மை பணியாளர்களுக்கு 2019–2020 ம் ஆண்டுக்குரிய தினக்கூலி | : | ரூ.614/– |
| 2) | ஒரு தூய்மை பணியாளருக்கு ஒரு ஆண்டுக்குரிய கூலி (ரூ.614x365) | : | ரூ.224110/– |
| | EPF - 13% | : | ரூ.29134/– |
| | ESI – 3.25% | : | ரூ.7284/– |
| | சீருடை மற்றும் பாதுகாப்பு உபகரணங்களுக்கு ஒரு ஆண்டுக்குரிய தொகை | : | ரூ.1500/– |
| | ஒப்பந்ததாரருக்குரிய நிர்வாக செலவு 5% | : | ரூ.11206/– |
| | மொத்தம் | : | ரூ.273234/– |
| 3) | 50 தூய்மை பணியாளர்களுக்கு ஒரு ஆண்டுக்குரிய செலவினம் (ரூ.273234x50) | : | ரூ.13661700/– |

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுதிக்கலாம்.

தூய்மை பணியாளர்கள் 50 நபர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்வதற்கு அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பலாம்.

தனி அலுவலர்
நெல்லியாளம் நகராட்சி

நெல்லியாளம் நகராட்சி அலுவலகம்,
பந்தலூர், நீலகிரி மாவட்டம்.

## சாதாரணக்கூட்டம் 29/01/2021 வெள்ளிக்கிழமை

**பொருள் எண்.1**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.8611/பி3/2013 எண்ணிட்ட 17/04/2013 ஆம் தேதிய கடிதத்திற்கிணங்க இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பணிகளுக்கென 50 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்தியது மற்றும் அதன் நீட்டிப்பு பெற்று 01/02/2020 முதல் 31/01/2021 முடிய பணிபுரிந்து வருகின்றனர். இந்த ஒப்பந்தாமானது 31/01/2020 அன்றுடன் நிறைவடைகிறது.

ஒப்பந்ததாரர் திருவாளர்.அட்சயா அசோசியேட்ஸ், கூடலூர் அவர்கள் மேற்படி ஒப்பந்தத்தை ஏற்கெனவே உள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையின் அடிப்படையிலேயே 01/02/2021 முதல் 28/02/2021 முடிய ஒரு மாதத்திற்கு மட்டும் பணிமேற்கொள்ள 29/01/2021 அன்று விருப்பக்கடிதம் அளித்துள்ளார். எனவே 01/02/2021 முதல் 28/02/2021 முடிய ஒரு மாதத்திற்கு மட்டும் 50 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் திருவாளர்.அட்சயா அசோசியேட்ஸ், கூடலூர் நிறுவனத்தின் மூலம் பெறுவதற்கும், பணி உத்திரவு வழங்குவதற்கும், அதற்கான தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதிஅனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.2**

வருவாய் வட்டாட்சியர், பந்தலூர் ந.க.அ2/3094/2020, நாள்.11/12/2020–ல் பந்தலூர் வட்டம் நெல்லியாளம் 1, புல எண்.18361/1, 1754/3, 2336/3A ஆகிய காலைகளில் உள்ள கிராம மேய்க்கால் மற்றும் நத்தம் புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வரும் ஆக்கிரமிப்புதாரர்களின் ஆக்கிரமிப்புகளை வகைப்பாடு மாற்றம் செய்ய வரன்முறை செய்து பட்டா வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து நெல்லியாளம் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளரால் இடம் நேராய்வு செய்யப்பட்டது. மேற்காணும் இடங்களில் பட்டா வழங்க இந்நகராட்சிக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என வட்டாட்சியர், பந்தலூர் அவர்களுக்கு தெரிவிக்க நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண். 3 / பணி எண்.1**

2020-2021 ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் கீழ் வார்டு எண்4 தேவாலா தொழிலாளர் குடியிருப்பு பகுதியில் தார் சாலை மேம்பாடு செய்தல் ரீச் 1. ரூ.10.00 இலட்சத்திற்கு 22.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.சலீம் | 16.00 % குறைவு |
| 2 | திரு. அகிலேஷ் | 5.21 % குறைவு |
| 3 | திரு.நசுரூதீன் | 24.07 % குறைவு |
| 4 | திரு.பி.பி யகோப் | 5.21 % குறைவு |

மேலும் மதிப்பீட்டு தொகையை விட 24.07 /- குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதால் கூடுதல் வைப்பு தொகையாக அரசு ஆணை எண் M.S No 555 Pw (G2) dept நாள் 17.11.1999ன் படி மதிப்பீட்டு தொகையில் 50 % கூடுதலாக ரூ.1,06,265 /- தொகையினை ஒப்பந்ததாரர் நிபந்தனைகளின் படி கூடுதல் வைப்புத் தொகையினை செலுத்த இசைவினை தெரிவிக்கும் பட்சத்தில் பணி உத்திரவு வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு**

1. வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. நசுரூதீன் என்பவர் 24.07 % மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலரின் ஒப்புதலுக்கு.
2. ஒப்பந்ததாரருக்கு கூடுதல் வைப்புதொகை (ASD) கட்ட அறிவுறுத்தலாம்.

பொருள் எண். 3 / பணி எண்.2

2020-2021 ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் கீழ் வார்டு எண்4 தேவாலா தொழிலாளர் குடியிருப்பு பகுதியில் தார் சாலை மேம்பாடு செய்தல் ரீச் 2. ரூ.5.00 இலட்சத்திற்கு 22.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.நசுரூதீன் | 24.06% குறைவு |
| 2 | திரு. பி.அசரப் | 16.00 % குறைவு |
| 3 | திரு.m/s மார்பல்சல் கண்ட்ஸ்ரக்சன் | 5.21% குறைவு |

மேலும் மதிப்பீட்டு தொகையை விட 24.06 /- குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதால் கூடுதல் வைப்பு தொகையாக அரசு ஆணை எண் M.S No 555 PW (G2) dept நாள் 17.11.1999ன் படி மதிப்பீட்டு தொகையில் 50 % கூடுதலாக ரூ.53,087 /- தொகையினை செலுத்தக்கோரி ஒப்பந்ததாரர் நிபந்தனைகளின் படி கூடுதல் வைப்புத் தொகையினை செலுத்த ஒப்புக்கொள்ளும் பட்சத்தில் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

அலுவலக குறிப்பு

1. வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. நசுரூதீன் என்பவர் 24.07 % மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலரின் ஒப்புதலுக்கு.
2. ஒப்பந்ததாரருக்கு கூடுதல் வைப்புதொகை (ASD) கட்ட அறிவுறுத்தலாம்.

பொருள் எண்.4

நெல்லியாளம் நகராட்சிக்குப்பட்ட கீழ்கண்ட இடங்களில் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

இலட்சம்

| | | |
|---|---|---|
| 1 | பந்தலூர், உப்பட்டி, நெல்லியாளம், பெருங்கரை, சேலக்குன்னா, தொண்டியாளம், ஆகிய பகுதிகளில் கிணறு மற்றும் பம்பு அறை பராமரிப்பு செய்தல் | ரூ.5.00 |
| 2 | தேவாலா நாடுகாணி புளியம்பாறை கோழிக்கொல்லி ஆகிய பகுதிகளில் கிணறு பராமரிப்பு செய்தல் | ரூ.5.00 |
| 3 | நெல்லியாளம் நகராட்சியில் சோலார் விளக்குகள் பராமரிப்பு செய்தல் | ரூ.10.00 |
| 4 | நெல்லியாளம் நகராட்சிகுட்பட்ட பகுதிகளில் வார்டு எண் 1 முதல் 7 வரை டேங்கர் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் | ரூ.6.00 |
| 5 | நெல்லியாளம் நகராட்சிகுட்பட்ட பகுதிகளில் வார்டு எண் 8 முதல் 14 வரை டேங்கர் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் | ரூ.6.00 |
| 6 | நெல்லியாளம் நகராட்சிகுட்பட்ட பகுதிகளில் வார்டு எண் 15 முதல் 21 வரை டேங்கர் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் | ரூ.6.00 |
| 7 | ஆமைக்குளம் சீனக்கொல்லி கல்லூாரி அருகில் குடிநீர் தொட்டி பராமரித்தல் | ரூ.3.50 |
| 8 | பந்தலூர் எம்.ஜி.ஆர் நகரில் மழைநீர் கால்வாய் அமைத்தல் | ரூ.4.50 |
| 9 | பாண்டியார் அங்கன்வாடிக்கு குடிநீர் வசதி செய்தல் | ரூ.4.00 |

அலுவலக குறிப்பு

அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.5

நெல்லியாளம் நகராட்சிக்கு ஆணையரின் பயன்பாட்டிற்கு பயன்படுத்தும் TN43X2905 எண் கொண்ட பொலிரோ வாகனத்திற்கு லைனர் பேடு, வீல்கிரிஸ் பேரிங், வீல்ராடு புஸ் ஜாயின் ஸ்டார் ஆகிய உதிரி பாகங்கள் பழுதடைந்துள்ளதை பணிமனைக்கு எடுத்துச் சென்று பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.19000/—த்திற்கு மன்றத்தின் அனுமிதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.6

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிட இனத்தவர்கள் இறந்தால் அவர்களின் ஈமச்சடங்கிற்கு வழங்கப்படும் தொகை ரூ.2500/–லிருந்து ரூ.5000/– ஆக உயர்த்தி வரப்பெற்ற அரசாணை (நிலை) எண்.105, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நாள்.19/10/2020 மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

பொருள் எண்.7

நெல்லியாளம் நகராட்சிக்கு ஆணையரின் பயன்பாட்டிற்கு பயன்படுத்தும் TN43X2905 எண் கொண்ட பொலிரோ வாகனத்திற்கு டயர்கள் தேய்வடைந்துள்ளதால் புதியதாக நான்கு டயர்கள் வாங்குவதற்கு 12/01/2021 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விலைப்புள்ளி அளித்த நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | M/s.Sree Hari Tyres, Gudalur | 32750/– |
| 2 | M/s.Balakrishna Tyres, Gudalur | 33050/– |
| 3 | M/s.Rajali Tyres, Gudalur | 33120/– |

அலுவலக குறிப்பு

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s. Sree Hari Tyres, Gudalur நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கவும், பட்டியல் தொகை வழங்கவும் அனுமதிக்கலாம்.

பொருள் எண்.8

நெல்லியாளம் நகராட்சி அலுவலகத்தில் பாதுகாப்பு நலன் கருதி சி.சி.டி.வி காமிரா பொருத்தும் பணிக்கு உத்தேச செலவினத் தொகை ரூ.80000/–திற்கும் மற்றும் விலைப்புள்ளி அறிவிப்பு வழங்கவும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.9

நெல்லியாளம் நகராட்சியில் Tipps பணிகள் செய்ய விலைப்புள்ளி கோரி பணி செய்தமைக்கு The Hub Tec Accessories & Services, Pandalur நிறுவனத்திற்கு தொகை ரூ.55980/– வழங்கியது மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பதிவு செய்யலாம்.

பொருள் எண்.10

நெல்லியாளம் நகராட்சியில் National Family Health Survey பணிகள் மேற்கொள்ளும் குழுவினருக்கு ஜாஸ் லாட்ஜ், பந்தலூர் மூலம் Accomondation வசதிகள் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

அனுமதி வழங்கலாம்.

தனி அலுவலர் 29/1/2021
நெல்லியாளம் நகராட்சி